# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 5/2018**

பெயர் : செல்லதுரை நாள் : 22.11.2022

வா.சா.2 – 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.2 – செல்லதுரை - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள முகவரியில்தான் வசிக்கிறேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லையென்றால், சரிதான். யார் சாட்சியம் சொல்ல அழைத்தார்கள் என்றால், நானாகத்தான் வந்தேன். தன்னிச்சையாக சாட்சியம் அளிக்க காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், சின்ராஜ் என்பவர் எனது சிநேகிதர் என்பதால் எனக்கு தெரிந்த விஷயங்களை சாட்சியம் கூறியுள்ளேன். இந்த வழக்கில் வாதி சின்ராஜ் ஆவார். 1ம் பிரதிவாதி கந்தாயி, 3ம் பிரதிவாதி அருணாசலம், 8ம் பிரதிவாதி ராமசாமி ஆவார்கள். வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எவ்வளவு நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் 2 இனங்களாக காட்டப்பட்டுள்ளது. இரண்டு இன சொத்துக்களுக்கான சக்குபந்தி இனங்கள் தெரியாது. வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்பதற்கு என்ன ஆவணத்தை பார்த்தேன் என்றால், எந்த ஆவணமும் நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் அவரது குடும்பத்தார்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால், வாதியினுடைய குடும்பத்தினர்கள் அவருக்கு பிரித்து கொடுத்த சொத்தை வாதி கிரையம் பெற்று விவசாயம் செய்து வருகிறார். வாதி பெயரில் பட்டா மற்றம் கந்தாய ரசீதுகள் உள்ளதா என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. நான் முதன்மை சாட்சியத்தில் பிரதிவாதிகள் எத்தனை ஆண்டுகள் காலம், எந்த வகையில் தெரியும் என்று கூறியுள்ளேனா என்றால், இல்லை. வாதி மற்றும் அவருடைய தகப்பனாருக்கு சுமார் 4 வருடத்திற்கு முன்பாக பிரச்சனை ஏற்பட்டது. வாதி மற்றும் அவரது குடும்பத்தார்கள் அதற்கு முன்பாக ஒன்றாகத்தான் இருந்தார்கள். வாதிக்கு சுமார் 10 வருடத்திற்கு முன்பாக திருமணம் நடைபெற்றது. வாதியின் திருமணத்தை அவருடைய பெற்றோர்கள்தான் முன்னின்று நடத்தி வைத்தார்கள் என்றால், சரிதான். வாதி மற்றும்

அவருடைய பெற்றோர்கள் 4 வருடத்திற்கு முன்பு வரை சுமூக உறவில், பேச்சுவார்த்தையில் இருந்து வந்தார்கள் என்றால், சரிதான். வாதியின் தகப்பனார் பெயர் கோனேரி ஆகும். வாதியின் தகப்பனார் கோனேரியுடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்கள், ஒரு சகோதரி கந்தாயி மட்டும்தான் எனக்கு தெரியும். கோனேரியுடன் பிறந்த சகோதரர்கள் எங்கு வாழ்ந்தார்கள், அவர்கள் எப்போது இறந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை கோனேரியின் சகோதரர்கள் அனுபவித்தார்களா என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்து சம்பந்தமாக 1998ம் ஆண்டிலிருந்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. முதல் விசாரணையில் சங்ககிரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்று கூறியுள்ள நிலையில், அது எந்த நீதிமன்றம் என்று கூறமுடியுமா என்றால், எந்த நீதிமன்றம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது. சின்ராஜ் என்பவர் சொல்லிதான் சங்ககிரி நீதிமன்றததில் வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியும். எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, அது எந்த வருடம் முடிவடைந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. சின்ராஜ் உழவடை செய்வதற்காக டிராக்டர் வந்தது. அது எந்த தேதி, மாதம், வருடம் வந்தது என்று தெரியுமா என்றால், நேரம் தெரியாது. நான்கு வருடத்திற்கு முன்பாக வந்தது. அது யாருடையது என்று தெரியாது. அது சம்பந்தமாக வாதி புகார் கொடுத்தாரா என்றால், புகார் கொடுத்தார். அந்த புகாரை எங்கு, யார்மீது, எப்போது கொடுத்தார் என்றால், அருணாசலம், ராமசாமி, கந்தாயி, செங்கோட்டையன்மீது புகார் கொடுத்தார், அந்த புகாரை எங்கு, எப்போது கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. அந்த புகாரை நான் பார்த்தேனா என்றால், இல்லை. புகாரையே பார்க்காத நிலையில் மேற்படி நான்கு நபர்கள்மீது புகார் கொடுத்ததாக எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால், பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள், அதனால் புகார் கொடுத்திருப்பார்கள் என்று நினைத்து நான் கூறினேன். வாதிக்கு வழக்கு சொத்தை அனுபவிப்பதை நிரூபிக்க ஆவணம் ஏதேனும் வாதி வசம் உள்ளதா என்று, நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக வாதியிடம் கேட்டேனா என்றால், கேட்டேன், இருப்பதாக கூறினார். சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக அவரிடம் என்ன ஆவணம் உள்ளது என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமுலத்தில் கூறியுள்ள விபரங்கள் என்னால், சொல்லப்பட்டவைதான். வழக்கு சொத்திற்கு அருகில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் உறவினர்கள் உள்ளார்கள் என்றால், சரிதான். வழக்கு

சொத்தில் நான் கூறுவதுபோல் எந்தவித உரிமையோ, பாத்தியமோ இல்லையென்றாலும், நான் வாதியின் நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சிய்ம அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதிக்கு வழக்கு சொத்தில் எந்தவித உரிமையோ, பாத்தியமோ இல்லையென்பதால்தான், அவர் பெயரில் எந்தவித வருவாய் ஆவணங்களும், இன்றைய தேதி வரை இல்லையென்றாலும், நான் வழக்கிற்காக வாதி வழக்கு சொத்தை அனுபவிப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால், அவர் வாதியின் பெற்றோர் மற்றும் குடும்பத்தார் பெயரில் வழக்கு தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், 1 ம் பிரதிவாதி வழக்கு சொத்தை வாதி அனுபவிப்பத்தை இடையூறு செய்வதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் வெளியூரில் குடியிருந்து வருகிறேன் என்பதால்தான், நான் குடியிருக்கும் முகவரியை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகளை எனக்கு தெரியாது என்றாலும், அதனால்தான் எத்தனை ஆண்டுகளாக எந்த வகையில் பிரதிவாதிகளை தெரியும் என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி வழக்கு சொத்தை அனுபவிக்கவும் இல்லை என்றாலும், 1, 3 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்தார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. அதனால் எனது சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் /செல்லதுரை

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சங்ககிரி.